PRIMARY SCHOOL
CONTINUAL ASSESSMENT 2
PRIMARY 5 TAMIL LANGUAGE

Name : ____________________________ (      )

Class : Primary 5____________________

Date : ______________

Name of Tamil Teacher: ___________

Parent's signature: ______________________

Total Time for Booklets A and B: 1 hour 40 minutes

INSTRUCTIONS TO CANDIDATES

1. Do not turn over this page until you are told to do so.
2. Follow all instructions carefully.
3. Answer all questions.
4. Write your answers in this booklet.

| BOOKLET | Maximum Marks | Marks Obtained |
|---|---|---|
| A | 46 | |
| B | 44 | |
| Total | 90 | |

23

www.testpapersfree.com

P -5 தேர்வுத்தாள் -4

நான் என் பத்தாவது பிறந்த நாளை...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 4 | 2) 1 | 3) 4 | 4) 3 | 5) 1 | 6) 3 |
| 7) 1 | 8) 2 | 9) 1 | 10) 4 | 11) 2 | 12) 4 |
| 13) 2 | 14) 3 | 15) 1 | 16) 3 | 17) 1 | 18) 3 |
| 19) 2 | 20) 4 | 21) 3 | 22) 2 | 23) 3 | 24) 2 |
| 25) 8 | 26) 4 | 27) 6 | 28) 10 | 29) 8 | 30) 1 |
| 31) 12 | 32) 4 | 33) 7 | 34) 11 | 35) 5 | |

36) கதவில் இருந்த மீனின் ஓவியம் பார்ப்பதற்கு அவலட்சணமாக இருந்ததோடு அது தன் வீட்டின் அழகை பாழாக்குகிறது என்று ரவி எண்ணியதே அவன் மீனின் ஓவியத்தை வெறுக்கக் காரணம் ஆகும்.

37) வந்திருப்பது திருடன் என்பதை அறிந்ததும் ரவியின் தந்தையும் அவருடைய சகோதரர்களும் எப்படியாவது திருடனைப் பிடித்து நையப்புடைக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

38) திருடன் வீட்டில் உள்ளவர்கள் தன்னை அடித்துக் காவலரிடம் ஒப்படைப்பார்கள் என்று எதிர்பார்த்தான். அதற்கு மாறாக ரவியின் தாத்தா அவனுக்கு அரிசியும் பணமும் கொடுத்து இனி திருட்டுத் தொழிலை விட்டு நேர்மையாக உழைத்து வாழும்படி அறிவுரையும் கூறி அனுப்பி வைத்தார்.

39) கதவில் தொங்கிய மீங்களைக் கண்டதும் ரவியின் தாத்தா திருடன் மீன் பிடித்து வாழ்க்கை நடத்துகிறான் என்று கருதினார்.

40) கதவில் மீன்களை வைத்த இளைஞன் திருடனின் மகன் என்றும் திருடன் இறந்து விட்டான் என்றும் தாத்தா அறிந்து கொண்டார். மேலும் தான் செய்ததை மகன் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதே திருடனின் கடைசி ஆசை என்பதையும் அறிந்தார்.

41) மீன் சித்திரத்தைச் செதுக்கினால் கதவில் எப்போதுமே மீன் இருக்கும். அதனால் மீனவனின் மகன் இனி மீன் கொண்டு வரத் தேவையில்லை என்பதாலேயே ரவியின் தாத்தா மீனவனின் மகனிடம் கதவில் மீனின் சித்திரத்தை செதுக்கச் சொன்னார்.



www.testpapersfree.com

40. கதவில் மீன்களை வைத்தவன் மூலம் ரவியின் தாத்தா அறிந்து கொண்ட தகவல்கள் யாவை ? (4 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

41. ரவியின் தாத்தா எதற்காக மீனவனின் மகனிடம் கதவில் மீனின் சித்திரத்தைச் செதுக்கச் சொன்னார் ? (3 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

23

www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது ( 20 மதிப்பெண்கள் )

36. ரவி கதவிலிருந்த மீனின் ஓவியத்தை வெறுக்கக் காரணம் என்ன ? ( 2 ம )

37. வந்திருப்பது திருடன் என்பதை அறிந்ததும், ரவியின் தந்தையும் அவருடைய சகோதரர்களும் என்ன செய்யத் திட்டமிட்டார்கள் ? ( 3 ம )

38. மாட்டிக்கொண்ட திருடன் என்ன நடக்கும் என எதிர்ப்பார்த்தான்? மாறாக என்ன நடந்தது ? ( 5 ம )

39. கதவில் தொங்கிய மீன்களைக் கண்டதும் ரவியின் தாத்தா என்ன கருதினார் ? ( 3 ம )

232

பணமும் தந்து அவனை உடனே அங்கிருந்து போகச் சொன்னார். இனி திருட்டுத் தொழிலை விட்டு நேர்மையாக உழைத்து வாழ்க்கை நடத்தும்படிச் சொன்னார். அத்திருடன் கை கூப்பி உன் தாத்தாவை வணங்கிவிட்டுச் சென்றான் ," என்று கூறி ரவியின் தந்தை சற்று நேரம் மௌனமானார்.

" பிறகு என்ன நடந்தது ? " என்று ரவி ஆவலுடன் கேட்டான். அவர் , " இரண்டு மாதங்கள் கழித்து , ஒரு நாள் விடியற்காலையில் இந்தக் கதவில் மீன்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அந்தத் திருடன்தான் இதைச் செய்திருக்கவேண்டும் ; அவன் மீன் பிடித்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்துவிட்டான் என்று உன் தாத்தாவுக்குப் புரிந்துவிட்டது. அந்த மீன்களைச் சமைத்துச் சாப்பிட்டோம். அன்றிலிருந்து நாள்தோறும் இந்தக் கதவில் மீன்கள் தொங்கவிடப்பட்டன , " என்று அவர் தொடர்ந்து பேசினார்.

" யார் மீன்களைக் கொண்டு வந்து வைக்கிறார் என்பதைத் தாத்தா அறிந்துகொள்ள ஆசைப்படவில்லையா ? " என்று ரவி வினவினான். அதற்கு அவனுடைய தந்தை , " ஆம். ஓர் இரவு முழுவதும் உன் தாத்தா விழித்திருந்தார். இளைஞன் ஒருவன் அதிகாலையில் அங்கு மீன் வைப்பதைப் பார்த்து அவனைப் பிடித்துக்கொண்டார். அவன் திருடனின் மகன் என்பதையும் திருடன் இறந்துவிட்டான் என்பதையும் தினமும் எங்கள் வீட்டுக்கு மீன் அனுப்பி வைக்கவேண்டும் என்பதே அவனுடைய கடைசி ஆசை என்பதையும் உன் தாத்தா அறிந்துகொண்டார். அவர் அவன் கையில் ஒரு கூர்மையான கத்தியைக் கொடுத்து , இந்தக் கதவில் மீன் ஒன்றைச் செதுக்கி வைக்கச் சொன்னார். அவ்வாறு செய்தால் , எப்பொழுதுமே கதவில் மீன் இருக்கும். மீனவனின் மகன் இனி மீன் கொண்டு வரத் தேவையில்லையே. அதனால்தான் உன் தாத்தா அப்படிச் சொன்னார். அவன் செதுக்கிய மீன்தான் இது , " என்று சொன்னார். ரவி தன் தந்தை சொன்னதை வியப்புடன் கேட்டான். அவன் மீண்டும் அந்த மீன் படத்தைப் பார்த்தான். " அப்பா ! இந்த மீன் படம்தான் நம் வீட்டிற்கே அழகு தருகிறது. இது என்றும் நிலையாக இங்கேயே இருக்கட்டும் ! " என்று உணர்ச்சி பொங்கக் கூறினான்.



www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

வீட்டுக் கதவில் மீன் ஓவியம் ஒன்று அவலட்சணமாக செதுக்கப்பட்டிருந்தது. அந்த ஓவியம் பல ஆண்டுகளாக அங்கே இருந்தது. அந்த வீட்டில் வசித்த ரவி அதைப் பார்த்து எரிச்சல் அடைந்தான். அவன் தன் தந்தையிடம் , " நான் குழந்தை பருவத்திலிருந்து இந்த மீனைப் பார்த்து வருகிறேன். இது நம் வீட்டின் அழகையே பாழாக்குகிறது . இதை எடுத்துவிட்டு இங்கே அழகான ஓவியம் வைக்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு வரவில்லையா ? நான் இந்த இடத்தில் புதிய ஓவியம் ஒன்றை வைத்தால் நம் வீடே அழகு பெறும் ! " என்று சொன்னான்.

அதற்கு ரவியின் தந்தை , " மகனே ! இந்த ஓவியம் எப்படி இங்கே வந்தது என்ற கதையைச் சொல்கிறேன். அதன் பிறகு நீ முடிவெடு. உன் தாத்தாவுக்கு நான்கு மகன்கள். அவர்களில் மூத்தவன் நான். ஒரு நள்ளிரவு , சமையல் அறையில் ஏதோ ஓசை கேட்டு எல்லாரும் விழித்துக்கொண்டோம். எவனோ திருடன் உள்ளே இருக்கிறான் என்பது எங்களுக்குப் புரிந்தது. எப்படியாவது அவனைப் பிடித்து நையப்புடைக்க வேண்டும் என்ற வெறி எங்களுக்கு ஏற்பட்டது. சமையலறைக்குள் நுழைய நாங்கள் தயாரானோம். உடனே உன் தாத்தா எங்களைத் தடுத்து நிறுத்தினார். அவர் எங்களைப் போய்த் தூங்கச் சொன்னார். அவர் பேச்சை என்றும் மீறாத நாங்கள் போய்ப் படுத்துக்கொண்டோம் , " என்று அவர் விளக்கினார்.

ரவி தன் தந்தை கூறுவதை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தான். அவர் தொடர்ந்து பேசினார். " உன் தாத்தா சமையலறைக்குள் நுழைந்தார். அங்கே ஒரு மூலையில் திருடன் ஒருவன் பயத்தில் நடுங்கியவாறு நின்றுகொண்டிருந்தான். தரையில் அரிசிப்பை கிடந்தது. உன் தாத்தா அதை எடுத்து அவனிடம் நீட்டினார். திருடனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. மேலும் அவர் கொஞ்சம்



www.testpapersfree.com

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| யுத்தம் நடந்துகொண்டிருந்தது. போரில் காயமடைந்த வீரர்கள் மருத்துவமனையில் (29)______ பெற்று வந்தார்கள். ஒருநாள் இராணுவ தளபதி, காயமுற்றவர்களைக் கண்டு ஆறுதல் கூற அங்கு வந்தார். இதன் (30)______ அந்த மருத்துவமனை பரபரப்பாக இருந்தது. சாகப் போகும் வீரன் ஒருவனின் படுக்கைக்கு அருகே தளபதி வந்தார். வீரனுக்குக் கண் பார்வை (31)______ . அதனால் வந்திருப்பது யார் என்று அவனுக்குத் தெரியவில்லை. | 29.(   )<br>30.(   )<br>31.(   ) |
| வீரன் , தான் சாகப் போவதால் தன் குடும்பத்தாருக்கு ஒரு கடிதம் எழுதும்படித் தளபதியிடம் கேட்டுக்கொண்டான். தளபதியும் அதற்கு (32)______ . அவர் அந்த வீரனின் அருகில் அமர்ந்து கொண்டார். வீரன் கூறும் வார்த்தைகளை ஒரு தாளில் (33)______ எழுதினார். திடீரென்று வீரனிடமிருந்து எந்தவொரு (34)______ வரவில்லை. அவன் இறந்து விட்டதைத் தளபதி உணர்ந்தார். (35)______ ! அவர் அக்கடிதத்தை வீரனுடைய குடும்பத்தாருக்கு அனுப்பி அவனுடைய ஆசையை நிறைவேற்றினார். அவர்தான் பின்னாளில் அமெரிக்க அதிபரான ஆப்ரஹாம் லிங்கன் ஆவார். | 32.(   )<br>33.(   )<br>34.(   )<br>35.(   ) |

| | | |
|---|---|---|
| 1. காரணமாக | 5. இருப்பினும் | 9. அப்போது |
| 2. செய்தியும் | 6. விரும்பினார் | 10. படபடவென்று |
| 3. ஓய்வு | 7. விறுவிறுவென்று | 11. சத்தமும் |
| 4. இணங்கினார் | 8. சிகிச்சை | 12. மோசமாகிவிட்டது |



229

www.testpapersfree.com

24 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

"ஆ" பிரிவு

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குரிய பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| 24. குளிர்பதனப் பெட்டி பழுதடைந்துவிட்டது. எனவே , அதில் அம்மா வைத்திருந்த வெண்ணெய் ________ விட்டது. | 24.( ) |
| 25. எனக்கு மிருதங்கம் வாசிக்க வேண்டும் என்ற ஆசை நீண்ட நாளாக உண்டு. நான் மக்கள் ________ ஏற்பாடு செய்த மிருதங்க வகுப்பில் சேர்ந்தேன் . | 25.( ) |
| 26. சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கடலில் பல ________ உயிரினங்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பது அனைவரின் கடமையாகும். | 26.( ) |
| 27. திருடன் "14" என்ற ________ வீட்டில் தங்கியிருப்பதாகக் காவலர்களுக்குத் தகவல் கிடைத்தது. உடனே அவர்கள் அவ்வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள். | 27.( ) |
| 28. புகழ் பெற்று ________ நடிகர் ஷாருக் காண் சிங்கைக்கு வருகை புரிந்தார். அவரைக் காண ரசிகர்கள் விமான நிலையத்தில் காத்திருந்தார்கள். | 28.( ) |

1. கலகம்
2. பாழாகி
3. விலங்கும்
4. அரிய
5. என்னுடைய
6. எண்ணுடைய
7. அறிய
8. கழகம்
9. பாலாகி
10. விளங்கும்



228

www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. போட்டிகள் ஏன் சிங்கப்பூரையொட்டி அமைந்ததாக இருக்கின்றன ?

(1) சிறுவர்களிடம் நாட்டுப் பற்றை வளர்க்க ஏற்பாட்டாளர்கள் எண்ணியதால்
(2) போட்டிகள் பிடோக் சமூக மன்றத்தில் நடைபெற்றதால்
(3) இந்நிகழ்ச்சிகள் தேசிய தினத்தையொட்டி நடைபெற்றதால்
(4) போட்டிகள் ஆகஸ்ட் மாதம் நடைபெற்றதால் ( )

22. நாற்பது வயது நிரம்பிய கலாவின் தாயார் எந்நிகழ்ச்சியில் பங்கேற்கலாம் ?

(1) கதை கூறும் போட்டியில்
(2) சமையல் நிகழ்ச்சியில்
(3) மருத்துவ ஆலோசனை நிகழ்ச்சியில்
(4) நாடகப் போட்டியில் ( )

23. ஏற்பாட்டாளர் அடையாள அட்டையைக் கொண்டு வரும்படி ஏன் கேட்டுக் கொள்கிறார்கள் ?

(1) திருமதி மனோரமாவின் சமையலைக் காணும் வாய்ப்பைப் பெறுவதற்கு
(2) திரு ரகுவரனின் பேச்சைக் கேட்கும் வாய்ப்பைப் பெறுவதற்கு
(3) இலவச மருத்துவச் சோதனை பெறும் வாய்ப்பைப் பெறுவதற்கு
(4) நாடகப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவதற்கு
( )

முற்றும்



227

www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :

சிங்கப்பூரின் 44 ஆவது தேசிய நாள் கொண்டாட்டங்கள் !!

(ஆகஸ்ட் 8 ஆம் தேதி - பிடோக் சமூக மன்றம்)

சிறுவர்களுக்கு !
(10 - 12 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கு)

கதை கூறும் போட்டி !

- சிங்கப்பூர் பழங்கதைகளாக இருக்கவேண்டும்
- 3 நிமிடங்களில் சொல்லி முடிக்க வேண்டும்

இளைஞர்களுக்கு !
(13 - 16 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கு)

நாடகப் போட்டி !

- குறைந்து மூவர் ஒரு குழுவில் இருக்கவேண்டும்
- கதை , சிங்கப்பூர் வரலாற்றை ஒட்டி அமைந்திருக்க வேண்டும்

எல்லாப் போட்டிகளும் மாலை 5 மணிக்குச் சமூக மன்ற மண்டபத்தில் தொடங்கும் !



**குடும்ப மாதர்களின் கவனத்திற்கு !**

- உங்கள் குடும்பத்தினருக்கு ஆரோக்கியமான உணவைச் சமைத்துத் தர விரும்புகிறீர்களா ? பல சமையல் புத்தகங்களை வெளியிட்டுப் பலரின் பாராட்டைப் பெற்ற திருமதி மனோரமா சமைத்துக் காட்ட விரும்புகிறார்! தாமதிக்காதீர்கள் , உடனே உங்கள் பெயரைப் பதிவு செய்யுங்கள் ! அனுமதி இலவசம்.

நேரம் : இரவு 7.30 இலிருந்து 9 வரை. இட வசதியைக் கருதி 40 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். திருமதி மனோரமாவின் சமையல் நூல்களை வாங்க விரும்புகிறீர்களா ? புத்தகங்கள் 20% கழிவில் விற்கப்படும் !
(அறை எண் : 01 - 07)



**தாத்தா பாட்டிமார்களின் கவனத்திற்கு ! ( வயது 50க்கும் மேல்)**

- மருத்துவர் திரு ரகுவரன் , வயது முதிர்ந்தவர்கள் எப்படி வியாதிகள் வருவதைத் தடுத்து மகிழ்ச்சியுடன் வாழலாம் என்பதையொட்டிப் பேசுவார். அதனையடுத்து இலவச மருத்துவ சோதனை வழங்கப்படும். இதற்காக உங்கள் அடையாள அட்டையைக் கொண்டு வரவும்.

- சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்படும் ! ( இடம் : இசைக்கூடம் )



www.testpapersfree.com

17. ஆளுநர் ஏன் நீதிபதியின் தீர்ப்பை மாற்றினார் ?

( 1 ) இளைஞன் வேண்டுமென்று அவர்மீது கல் எறியாததால்

( 2 ) நீதிபதி வழக்கைத் தீர விசாரிக்காததால்

( 3 ) அவர் குணமடைந்து விட்டதால்

( 4 ) இளைஞன் அவரிடம் கெஞ்சியதால் ( )

சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. இளைப்பாறினார்

(1) அமர்ந்தார்

(2) உரையாடினார்

(3) ஓய்வெடுத்தார்

(4) புசித்தார் ( )

19. பதம் பார்த்துவிட்டது

(1) இடித்துவிட்டது

(2) காயப்படுத்திவிட்டது

(3) கீறிவிட்டது

(4) சீண்டிவிட்டது ( )

20. குழப்பத்தை

(1) ஆவேசத்தை

(2) ஆதரவை

(3) குதூகலத்தை

(4) சந்தேகத்தை ( )



22

www.testpapersfree.com

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. ஆளுநர் எதற்காக அரண்மனைக்கு அனுப்பப்பட்டார் ?

( 1 ) அவர் ஓய்வு பெறுவதற்கு
( 2 ) அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்கு
( 3 ) அவர் மாங்கனிகளைப் புசிப்பதற்கு
( 4 ) அவர் மக்களைச் சந்திப்பதற்கு ( )

14. வேலையாட்கள் , கல்லை எறிந்தவன் இளைஞனே என்ற முடிவுக்கு எப்படி வந்தார்கள் ?

( 1 ) அவன் மாம்பழத்தை ருசித்துத் தின்றுகொண்டிருந்ததால்
( 2 ) அவன் கையில் கற்கள் இருந்ததால்
( 3 ) அவனைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லாததால்
( 4 ) அவன் மாமரத்தில் இருந்ததால் ( )

15. இளைஞன் கல் எறிந்ததற்குக் காரணம் என்ன ?

( 1 ) மாம்பழங்களை விழச் செய்வதற்கு
( 2 ) தனது பசியை அடக்குவதற்கு
( 3 ) குறி தவறாமல் கல் விழுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு
( 4 ) ஆளுநருக்குத் தொல்லை தருவதற்கு ( )

16. ஆளுநருக்கு மூளை கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று ஏன் சிலர் எண்ணினார்கள் ?

( 1 ) அவர் நீதிபதியை அவமதித்ததால்
( 2 ) அவர் இளைஞனிடம் பணிவாகப் பேசியதால்
( 3 ) அவர் இளைஞனை விடுவித்ததால்
( 4 ) அவர் நீண்ட நேரம் ஆழ்ந்து சிந்தித்ததால் ( )



www.testpapersfree.com

ஆளுநரின் வேலையாட்கள் அந்த இளைஞனை நீதிபதியிடம் இழுத்து வந்தார்கள். அவர் உடனே அந்த இளைஞனுக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை வழங்கினார். அங்கே ஆளுநர் வந்தார். உடனே இளைஞன் அவரிடம் , " ஐயா ! பசி என் வயிற்றைக் கிள்ளியது. மாமரத்தில் கனிகள் குலை குலையாய்த் தொங்குவதைக் கண்டு தொலைவிலிருந்து கல்லை வீசினேன். அது தவறித் தங்களைப் பதம் பார்த்துவிட்டது. என் செயலுக்காக மிகவும் வருந்துகிறேன். என்னைத் தயவுசெய்து மன்னித்துவிடுங்கள் , " என்று கெஞ்சினான்.

ஆளுநர் இளைஞனிடம் , " மரத்தின்மீது நீ வீசிய கல்லால் உனக்கு என்ன கிடைத்தது ? " என்று வினவினார். " எனக்கு இரு மாங்கனிகள் கிடைத்தன , " என்று அவன் பதிலளித்தான். ஆளுநர் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பின்னர் இளைஞனை விடுதலை செய்யுமாறு நீதிபதியிடம் கூறினார். அதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் திகைத்தார்கள். ஆளுநருக்கு மூளை கோளாறு ஏற்பட்டு விட்டதா என்று சிலர் எண்ணத் தொடங்கினார்கள்.

மக்களின் குழப்பத்தைப் புரிந்துகொண்ட ஆளுநர் தம்முடைய தீர்ப்புக்கு விளக்கம் அளித்தார். " அறிவே இல்லாத மரம் , தன்மீது கல் வீசியவனுக்கு இரு மாம்பழங்களை வழங்கியது. ஆனால் , அதே கல் என் மீது விழுந்தது என்பதற்காக நான் இவனுக்குச் சிறைத் தண்டனையா கொடுப்பது ? எனவே நான் அவனை விடுதலை செய்கிறேன் , " என்று ஆளுநர் அங்கிருந்தவர்களை நோக்கிப் பேசினார். நாட்டு மக்கள் ஆளுநரின் உயர்ந்த உள்ளத்தைப் பாராட்டினார்கள்.



22

www.testpapersfree.com

11. ஓதுவது ____________ .

(1) பேசேல்
(2)ஒழியேல்
(3)கடைப்பிடி
(4)இகழேல் ( )

12. மந்திரிக்கு அழகு வரும்பொருள் __________ .

(1) கேட்டல்
(2) கூறுதல்
(3)காணுதல்
(4)உரைத்தல் ( )

<u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>

<u>பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி</u>

அப்போது சிங்கப்பூர் , பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. பிரிட்டிஷ் ஆளுநர் ( governer) தீவைச் சுற்றி வந்துகொண்டிருந்தார். களைப்பின் மிகுதியால் அவர் ஓர் அடர்ந்த மாமரத்தின் நிழலில் இளைப்பாறினார். அவருடன் வந்த ஆலோசகரும் வேலையாட்களும் அங்கேயே சில நிமிடங்கள் தங்கினர். எங்கிருந்தோ ஒரு கல் பறந்து வந்து ஆளுநரின் தலையைத் தாக்கியது. [redacted] ஆளுநரின் வேலையாட்கள் கல் எறிந்தவனைத் தேடினார்கள். [redacted] அவனே கல் எறிந்திருக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெளிவாயிற்று.



222

www.testpapersfree.com

செய்யுள் / பழமொழி

செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம்__________ .

(1) மழை
(2) அறம்
(3) சினம்
(4) அன்பு ( )

8. ஒருவர் பொறை இருவர் __________.

(1) பகை
(2) நட்பு
(3) கேடு
(4) பிரிவு ( )

9. பெருமையும் __________ தான் தர வருமே.

(1) சிறுமையும்
(2) வறுமையும்
(3) சீற்றமும்
(4) சுற்றமும் ( )

10. கற்க கசடற கற்பவை கற்றபின் __________ அதற்குத் தக.

(1) பழக
(2) நடக்க
(3) கற்க
(4) நிற்க ( )



22

www.testpapersfree.com

2. (1) அழகில்
(2) அழகை
(3) அழகிற்கு
(4) அழ்கால் ( )

3. (1) அம்மாவுடைய
(2) அம்மாவுடன்
(3) அம்மாவை
(4) அம்மாவிடம் ( )

4. (1) கண்களில்
(2) கண்களால்
(3) கண்களை
(4) கண்களுக்கு ( )

5. (1) பெண் முயலுடன்
(2) பெண் முயலுக்கு
(3) பெண் முயலை
(4) பெண் முயலால் ( )

6. (1) நூலகத்தை
(2) நூலகத்தில்
(3) நூலகத்திற்கு
(4) நூலகத்திலிருந்து ( )



220

www.testpapersfree.com

P5

CA-2

தேர்வுத்தாள் - 4

1 முதல் 32 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் , சரியான விடையின் எண்ணுள்ள ( 1, 2, 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு

" அ " பிரிவு

வேற்றுமை

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து , அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

நான் எனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினேன். அப்போது நான் என் (1)______ அன்பளிப்பாக ஒரு முயலைப் பெற்றேன். அங்கிருந்தவர்கள் அதன் (2)______ மனதைப் பறிக்கொடுத்தனர். அதன் ரோமம் மென்மையாகவும் பட்டுப் போன்று பளபளப்பாகவும் இருந்தது. நான் அதைத் தூக்கி என் (3)______ காண்பித்தேன். " இது ஓர் ஆண் முயல். அதன் (4)______ பார். அதற்கு ஜோடியாக ஒரு பெண் முயலையும் வாங்க வேண்டும். அப்போதுதான் இது மகிழ்ச்சியாக இருக்கும் , " என்று அவர் சட்டென்று கூறினார்.

மறுநாள் என் தாயார் ஒரு (5)______ வீடு திரும்பினார். அதே வேளையில் நான் (6)______ சென்று முயல் வளர்ப்புப் பற்றிய நூல்களை இரவல் வாங்கி வந்து படிக்கத் தொடங்கினேன். நான் என் இரு முயல்களையும் சிறப்பாக வளர்க்க முடிவு செய்தேன்.

1. (1) தாத்தாவுக்கு
   (2) தாத்தாவுடைய
   (3) தாத்தாவிடம்
   (4) தாத்தாவிடமிருந்து ( )



21C


www.testpapersfree.com

P 5

தேர்வுத்தாள் – 4

வினா - 2

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | |
|---|---|
| குறும்புக்காரச் சிறுவன் | காகித விமானம் |
| தலையில் விழுந்தது | ஆத்திரமடைந்தான் |
| கண்ணில்பட்டது | வலியால் துடித்தான் |
| தோழியின் உதவியால் | முதலுதவியளித்தார் |